அடையாள இலக்கம்:

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# விசேட எழுத்தறிவுப் போட்டி

**இளைஞர் பிரிவு**
(18-30 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.00 மணி

**அ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை விடப்பட்ட இடத்தில் எழுதவும்.** புள்ளிகள்: 40 x 1 = 40

1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? ( )
    1. இளங்கோ அடிகள் 2. பூபதி அடிகள்
    3. சேக்கிழார் 4. கம்பர்

2. 'காட்டாறு' நூலை எழுதியவர் யார்? ( )
    1. செங்கை ஆழியான் 2. கோகிலா மகேந்திரன்
    3. இந்துமதி 4. அம்பிகைபாகர்

3. 'பொன்னியின் செல்வன்' நூலை எழுதியவர் யார்? ( )
    1. சாண்டில்யன் 2. கல்கி
    3. அகிலன் 4. மு.மேத்தா

4. இலங்கையிற் பிறந்த சிறந்த தமிழ்க் கவிஞர்? ( )
    1. மகாகவி பாரதி 2. வைரமுத்து
    3. மாககவி உருத்திரமூர்த்தி 4. வாலி

5. மகாபாரதத்தை தமிழில் எழுதியவர் யார்? ( )
    1. வில்லிபுத்தூரர் 2. கம்பர்
    3. பாரதியார் 4. நக்கீரர்

6. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்பது போல கடலும் கடல் சார்ந்த இடம் எது? ( )
    1. நெய்தல் 2. முல்லை
    3. மருதம் 4. பாலை

7. சோழ மன்னர்களில் ஒருவன்? ( )
    1. மாமல்ல நரசிம்மன் 2. முதலாம் இராஜேந்திரன்
    3. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் 4. செங்குட்டுவன்

8. பல்லவ மன்னர்களின் தலைநகரம்? ( )
    1. உறையூர் 2. வஞ்சி
    3. கபாடபுரம் 4. காஞ்சிபுரம்

9. காவேரிக்குக் கல்லணை அமைத்த சோழ மன்னன்? ( )
    1. இராஜராஜன் 2. கரிகாலன்
    3. குலோத்துங்கன் 4. இராஜேந்திரன்

10. தமிழ் நாட்டை ஆட்சி <u>செய்யாத</u> மன்னர் குலம் எது? ( )
    1. பாண்டியர் 2. களப்பிரர்
    3. சோழர் 4. மௌரியர்

11. □குணதிசை' என்று அழைக்கப்படும் திசை? ( )
    1. வடக்கு 2. கிழக்கு
    3. தெற்கு 4. மேற்கு

12. ‘வாளி’ என்ற சொல்லுக்குப் பொருளாக அமையக்கூடியது?
1. வாள் 2. அம்பு ( )
3. உணவு 4. ஒழுக்கம்

13. ‘வேலை’ என்ற சொல்லுக்குப் பொருளாக அமையக்கூடியது?
1. சோறு 2. ஓலை ( )
3. கடல் 4. சூரியன்

14. ‘இளைஞன்’ என்ற சொல்லுக்குப் பெண்பாற் சொல்?
1. பெண் 2. இளைஞி ( )
3. யுவதி 4. மகள்

15. □எதிர்ப்பு’ என்று சொல்லுக்கு எதிர்க் கருத்துள்ள சொல்? ( )
1. ஆதரவு 2. பண்பு
3. பணிவு 4. ஒழுக்கம்

16. ‘அரி’ என்ற சொல்லுக்கு ஒரே பொருள் தரும் மொழிகள் எவை?
1. தமிழ், அரபு 2. தமிழ், ஸ்பானிஷ் ( )
3. தமிழ், ஜப்பானிய மொழி 4. தமிழ், ஹீப்ரு

17. ‘புலி’ என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்?
1. வேங்கை 2. கரி ( )
3. திரை 4. கமலம்

18. யாழ்ப்பாண மன்னர்களின் கொடியில் இருந்த சின்னம் எது?
1. மான் 2. கிளி ( )
3. இடபம் 4. சிறுத்தை

19. தமிழ் மொழியைச் செம்மொழியாக்கப் பாடுபட்ட அமெரிக்கப் பேராசிரியர்?
1. பேராசிரியர் சுமாயா 2. பேராசிரியர் ஹரிஸ் ( )
3. பேராசிரியர் கிமர் 4. பேராசிரியர் பெனாண்டோ

20. தமிழ் மொழி எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
1. ஆரிய 2. இந்தோ-ஆரிய ( )
3. திராவிட 4. ஆசிய

21. இந்தியாவிலுள்ள தமிழர்களின் தொகை இந்திய சனத் தொகையில எண்ணளவாக எத்தனை வீதம்?
1. 7% 2. 25% ( )
3. 70% 4. 2.5%

22. கவிஞர் கண்ணதாசன் கடைசியாக எழுதிய பாடல்? ( )
1. ஊரெல்லாம் 2. நீ வருவாயென
3. ஓஹோ மனம் 4. கண்ணோ கலைமானே

23. கற்பிற்கு இலக்கணம் சீதை போல, நட்பிற்கு இலக்கணம்? ( )
1. கும்பகர்ணன் 2. கர்ணன்

3. திரௌபதி 4. பீஷ்மர்

24. மகாபாரதத்தில் காங்கேயன் என்ற இயற்பெயர் கொண்ட அரசகுமாரர்?
1. அருச்சுனன் 2. நகுலன் ( )
3. துரியோதனன் 4. அபிமன்யு

25. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருக்கும் மண்அணை-பாலத்தின் பெயர் அல்லாதது?
1. இராமர் அணை 2. சேது அணை ( )
3. அனுமான் அணை 4. அடம் அணை

26. யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்காதவர்?
1. பேராசிரியர் வித்தியானந்தன் 2. பேராசிரியர் துரையாஜா ( )
3. பேராசிரியர் சிவத்தம்பி 4.பேராசிரியர் சண்முகலிங்கன்

27. 'வாழ்க நிரந்தரம்' என்று ஆரம்பிக்கும் பாடலை எழுதியவர்?
1. அப்பர் சுவாமிகள் 2. பாரதியார் ( )
3. கிருபானந்த வாரியார் 4. யோகர் சுவாமிகள்

28. இலங்கையின் கம்பன் கழகத்தின் நிறுவுனர் அல்லாதவர்?
1. கம்பவாரிதி ஜெயராஜ் 2. திருநந்தகுமார் ( )
3. சு. வித்தியனந்தன் 4. குமாரதாசன்

29. பின்வருவோரில் தமிழ்க் கவிஞர் அல்லாதவர் யார்? ( )
1. முருகையன் 2. சடாகோபன்
3. மு. மேத்தா 4. மாத்தளை சோமு

30. மூத்தோர் சம்மதமின்றித் தலைவி தலைவனுடன் சென்று வாழ்வை அமைத்தல் தமிழ் மரபில் எவ்வாறு அழைக்கப்படும்? ( )
1. சுயம்வரம் 2. உடன்போக்கு
3. வடக்கிருத்தல் 4. பெண்வழிச் சேரல்

31. அடம்பன் கொடியும் திரண்டால் ………………?
1. அழிவு 2. ஒடியும் ( )
3. மிடுக்கு 4. வளையும்

32. யாழ் நூலை இயற்றியவர் யார்?
1. விவேகானந்தர் 2. விபுலானந்தர் ( )
3. வித்துவான் வேந்தனார் 4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

33. தமிழரைப் போல் சீதனம் (வரதட்ஷணை) கொடுக்கும் வழக்கம் உடைய இனத்தவர்?
1. யூதர் 2. மாயா இந்தியர் ( )
3. பிக்மிகள் 4. சூளுக்கள்

34. 'க' என்ற தமிழ் எழுத்து குறிக்கும் எண் எது?
1. ஒன்று 2. இரண்டு ( )
3. மூன்று 4. ஐந்து

35. இரண்டாவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்? ( )
1. மலேசியா 2. யாழ்ப்பாணம்
3. தஞ்சாவூர் 4. சிங்கப்பூர்

36. இலங்கையின் ஆதிக்குடிகளாகக் கருதப்படுபவர்கள்? ( )
1. இயக்கர், நாகர் 2. வன்னியர், பாணர்
3. அரையார், சேரர் 4. சோழர், பாண்டியர்

37. ‘பாண்’ (Bread) என்ற சொல்லுக்கு வழங்கப்படும் தமிழ்ச் சொல்?
1. அவிப்பி 2. வெதுப்பி ( )
3. மாப் பசை 4. பாணி

38. பழமொழி என்பதைப் பிரித்து எழுதினால்?
1. பழம் + மொழி 2. பழ + மொழி ( )
3. பழமை + மொழி 4. பழைய + மொழி

39. இலங்கையில் சிறந்த நாவலாசிரியருக்கு வழங்கப்படும் சாகித்திய மண்டல பரிசு பெறாத பிரபல எழுத்தாளர்?
1. கோகிலா மகேந்திரன் 2. எஸ். பொன்னுத்துரை ( )
3. பேராசிரியர் பூலோகசிங்கம் 4. மாத்தளை சோமு

40. சிட்னியில் முதலில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை எது?
1. ஹோம்புஸ் தமிழ்க் கல்வி நிலையம்
2. வென்டவேர்த்வில் தமிழ்க் கல்வி நிலையம் ( )
3. ஆஷ்பீல்ட் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி
4. பேர்வூட் பாரதி பள்ளி

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் கோடிட்ட இடத்தில் எழுதவும்.**

புள்ளிகள்: 15 x 2 = 30

1. அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஈழத்திலே எவ்வாண்டு நடந்தது? ……………………..

2. ‘மானிப்பாய் அகராதி’ எனப்படும் தமிழகராதி எந்த ஆண்டில் வெளிவந்தது? ………………….

3. விமர்சனம் என்ற வடசொல்லுக்கு உகந்த தமிழ்ச் சொல் தருக?

……………………………

4. Monopoly என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒத்த தமிழ்ச் சொல் தருக?

……………………………….

5. ‘மானம்பு’ என்ற சொல்லைத் திருத்தி எழுதுக?

………………………..

6. ‘கைமாறு’ என்ற சொல்லைத் திருத்தி எழுதுக?

………………………..

7. ‘தலையால் நடத்தல்’ என்ற மரபுத் தொடரின் பொருளை விளக்குக?

……………………………………………………………………………

8. ‘காலாறுதல்’ என்ற மரபுத் தொடரின் பொருளை விளக்குக?

……………………………………………………………………………

9. அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி அமைப்பிற்கு சூத்திரதாரியான ஈழத்தமிழர் யார்?

………………………………..

10. ‘நாவலர்’ எனப் பட்டம் பெற்றவர்கள் இருவரைக் குறிப்பிடுக?

……………………………………..

……………………………………..

11. கல்கி ஆசிரியர் திரு.ரா.கிருஷ்ணமூர்த்தியின் புனைபெயர்களில் ஒன்றைத் தருக?

……………………………………

12. ‘எஸ்.பொ’ என்ற ஈழத்து எழுத்தாளரின் இயற்பெயர் என்ன?

……………………………………

13. Helicopter என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒத்த தமிழ்ச் சொல் தருக?

……………………………………..

14. ‘புத்ர’ என்ற நாவலை எழுதியவர் யார்?

……………………………………………..

15. ‘நந்திபுரத்து நாயகி’ என்ற நாவலை எழுதிய பிரபல நாவலாசிரியர் யார்?

…………………………………………….

| புள்ளிகள் | |
|---|---|

**இ) கீழே தரப்பட்ட இரண்டு தலைப்புக்களில் ஒன்றைப் பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. கொடுக்கப்பட்ட எழுதுதாளை இதற்கு உபயோகிக்கவும்.**

புள்ளிகள் = 30

1. இன்னும் 20 ஆண்டுகளில் (அதாவது 2030ம் ஆண்டளவில்) உங்கள் தாயகம் எப்படியான மாற்றங்களுக்குள்ளாகும் என்பதையும், எப்படியான ஒரு நாடாக விளங்கலாம் என்பதைப் பற்றியும் விபரிக்க.

2. தமிழுக்குச் சேவையாற்றும் சங்கம் ஒன்றின் தலைமைப் பொறுப்பு உங்களுக்கு வழங்கப்படகின்றது. உங்கள் பதவிக் காலத்தில் நீங்கள் சாதிக்க விரும்பும் திட்டங்கள் பற்றியும், புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திற்கான உங்களது தொலைநோக்குகளை வெளிப்படுத்தும் ஒரு கட்டுரை எழுதுக.

குறிப்பு: இத்துடன் தரப்பட்ட எழுத்துத்தாளில் உங்கள் கட்டுரையை எழுதுங்கள்.

| | |
|---|---|
| **புள்ளிகள்** | |

| | |
|---|---|
| **மொத்தப் புள்ளிகள்** | |